சிறுகூடல்பட்டி
நாராயண சுவாமி படைப்பு வரலாறு



நாராயண சுவாமி

உ

சிவமயம்

ஸ்ரீ கலங்காதகண்ட விநாயகர் துணை

சிறுகூடல்பட்டி நாராயண சுவாமி படைப்பு வரலாறு

ஸ்ரீ விஜய வருடம்
ஆடி மாதம் 1ஆம் தேதி
பெரிய படைப்பின் போது வழங்கப்பட்டது.
17.7.2013

அன்புடன் வழங்குவோர்

எஸ். வயிரவன்

வயி. சுவாமிநாதன்

குமரன் பதிப்பகம்

குமரன் பதிப்பகம்
19, கண்ணதாசன் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
போன்: 2435 3742, 2431 2559

பிள்ளாத்தாள், செட்டியார் அருள் வேண்டுதல்

பிள்ளாத்தாள், செட்டியார் ஆகிய தாங்கள் இருவரும் சிவபதம் அடைந்து, பிள்ளையார், அரசிமகன், சின்னக்கருப்பர், நாராயணசுவாமி ஆகியோருடன், தெய்வமாக இந்த இடத்தில் வீற்றிருக்கிறீர்கள்.

உங்கள் குடும்பத்தார்களாகிய நாங்கள், தெரிந்தும் தெரியாமலும் அறிந்தும் அறியாமலும் செய்த பிழைகளைப் பொறுத்து, இன்று நாங்கள், தங்களுக்குப் படைக்கும் படைப்பினை ஏற்று, தங்கள் பேரன் பேத்திகளாகிய எங்கள் எல்லோருக்கும் நோய்நொடி இல்லாத நல்வாழ்வினைத் தந்து, காத்துஅருள வேண்டுகிறோம்.

இதே போல ஆண்டுதோறும் நாங்கள் எல்லோரும் இங்கு ஒன்றுகூடித் தங்களுக்குப் படைத்து வருகின்ற நல்வாய்ப்பினைத் தந்து அருள வேண்டுகிறோம்.

5 2/4

பதிப்புரை

கீழச்சிவல்பட்டி, பி. அளகாபுரி, ராயவரம், தேவகோட்டை, அமராவதிபுதூர் ஆகிய ஊர்களில் உள்ள மாத்தூர் கோவில் கண்ணூர் பிரிவைச் சேர்ந்த நம் பங்காளிகள் வருடம்தோறும் ஆடி மாதம் சிறுகூடல்பட்டியில் கூடி நாராயண சுவாமி "படைப்பில்" கலந்து கொண்டு நம் சமூகத்தில் மிகவும் சீரும் சிறப்புடன் வாழ்ந்து வருகிறோம்.

நமது படைப்பிற்கு, அரசர் "நாராயண சுவாமி படைப்பு" என்று எப்படி பெயர் வந்தது என்பது நமது பங்காளிகளில் பெரியவர்களைத் தவிர இன்றைய இளைஞர்களுக்கு தெரியவில்லை. வருங்கால நமது சந்ததியினருக்கும் படைப்பு வரலாறு தெரிய வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் நாராயண சுவாமி படைப்பு வரலாற்றை எழுதித் தரும்படி பி. அளகாபுரி திரு. நா.தெ.மு.தெ.அழகப்பண்ணன் அவர்களிடம் பலமுறை கேட்டுக் கொண்டதற்கு இணங்க இந்த ஆண்டு நாராயண சுவாமி படைப்பு வரலாற்றை மிகவும் அழகாகவும், தெளிவாகவும் அனைவரும் புரிந்து கொள்ளும்படி எளிமையாகவும் எழுதித் தந்தார்கள்.

நாயக்கர்களைப் பற்றியும் மற்றும் படைப்பு பற்றிய பல அரிய செய்திகளையும் சிறப்பான முறையில் தொகுத்து

தந்துள்ளார்கள். திரு. நா.தெ.மு.தெ. அழகப்பண்ணன் அவர்களுக்கு நம் பங்காளிகள் அனைவரின் சார்பிலும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு ஆண்டும் படைப்பு நடத்துவது என்பது சாதாரண காரியமல்ல. இரண்டுமாத காலமாக அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சீரும் சிறப்புடன் செய்து நாராயண சுவாமி படைப்பை ஒரு வேள்வியாக நடத்தி வந்த பி. அளகாபுரி நா.தெ.மு. குடும்பத்தாருக்கும், தற்சமயம் பொறுப்புகளை ஏற்று நடத்தி வரும் பி. அளகாபுரி வெ.நா.வெங்கடாசலம் செட்டியார், கீழச்சிவல்பட்டி கி.நா.பழ.கி.பழநியப்ப செட்டியார், பி. அளகாபுரி க.தெ.நா.அ.வ.தெ. அங்கப்ப செட்டியார் ஆகிய மூன்று குடும்பத்தினருக்கும் நம் பங்காளிகள் அனைவரின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் அனைவரும் ஆண்டுதோறும் ஆடி மாதம் சிறுகூடல்பட்டி வந்து நாராயணசாமியையும், செட்டியாரையும், பிள்ளாத்தாளையும் மனமுருக வணங்கி நம்வாழ்வில் அனைத்துச் செல்வங்களும் பெற்று சிறப்புடன் வாழ்ந்து வருவோம்.

இது பொய்யில்லை
கண் கண்ட உண்மை.

நீங்களும் வருடம் தோறும் வந்து வணங்குங்கள்.
வாழ்வில் வளம் பெறுங்கள்.

அன்புடன்
S. வயிரவன்
குமரன் பதிப்பகம்

உ

சிவமயம்

ஸ்ரீ கலங்காதகண்ட விநாயகர் துணை.

நாராயண சுவாமி படைப்பு வரலாறு

சாமியாடி கிருஷ்ணப்ப செட்டியார் மகன்-வழிப்பேரன் பி. அளகாபுரி வெ.கி.அ. பழநியப்ப செட்டியார் அவர்கள், நம்மள் நாராயணசுவாமி படைப்பு வரலாறு பற்றி ஏற்கெனவே எழுதி இரண்டு பதிப்பு வெளியிட்டார்கள். (27.6.1974 மற்றும் 22.8.1974) அவர்கள் தந்துள்ள நாராயணசுவாமி படைப்பின் வரலாற்றில் இருந்து முக்கியமான பகுதிகளை மட்டும் சுருக்கி இதில் தந்துள்ளேன்.

விநாயகர் துதி

ஓங்காரத் துள்ளே ஒளிரும் பெருமானை
பாங்கான பாரதத்தை பாருக்குத் தந் தானை - தேங்கு
திருவானை
நம்பி இருக்கும் நமது குலத்தார்க்குத்
தும்பிக்கை யானே துணை.

ஸ்ரீமக்கமடை அய்யனார் துதி

மங்கையராம் பிள்ளாத்தாள் மாதேவி தோற்றுவித்த
எங்கள் குலம் தழைக்க என்னாளும் - பொங்கு புகழ்
மக்கள்மடை அய்யன் மலரடியை வேண்டுகிறோம்
பக்கம்நின்று காப்பான் பரிந்து.

அரசி மகன்

மாலரனும் கூடி மருவியதால் வந்துதித்த
பாலகனாம் ஐயன் பரிந்தளித்த - சீலம்நிறை
அரசி மகனான அழிஞ்சிலே நின்னடியில்
கரங்குவித்தோம் என்னாளும் கனிந்து.

சின்னக்கருப்பர் துதி

ஐயனுக்கு மெய்யான ஆண்மையுள சேவகனாம்
கையரிவாள் பிடித்த கருங்காளை - வையகத்தில்
செய்வினைகள் நீக்கியெமை தினந்தினமும்
காத்திடுவான்
மைமேனி வண்ணன் மகிழ்ந்து

நாராயணசுவாமி துதி

செய்யாதன செய்தும் திருவருளால் தேவநிலை
எய்திப் புகழ்படைத்த எமதரசர் - மெய்யான
நாரணரை வேண்டுகிற நம்மையவர் என்னாளும்
வாரணம்போல் காப்பார் வரிந்து

செட்டியார் துதி

செட்டிமகன் எங்கள்குலத் திருவிளக்கு
தெய்வமாய் வந்து எம்மை காக்கும் வள்ளல் - சிறுகூடல்
பட்டியிலே எங்கள் குலம் தோற்றுவித்தார்
பரிதிபோல் நம்மை என்றும் வாழச் செய்வார்
அட்டியில்லை ஈதுண்மை அறிந்தோமின்று
ஆதலால் அவர் பதத்தை வணங்குவோமே.

பிள்ளாத்தாள் துதி

குலம் தழைக்க வைத்த கோமகளாம் எங்களன்னை
மலரடியை எண்ணி வணங்குகிறோம் - நிலம் புகழ
வாழவைத்து என்னாளும் வற்றாதசெல்வம் நல்கி
பாழ்நீக்கிக் காக்க பரிந்து.

நமது குல வரலாறு

காவிரிப்பூம்பட்டிணத்திலிருந்து பாண்டிய நாடு வந்த நம் சமூகம் ஆங்காங்கே குறுநில மன்னர்கள், கிராமத்தலைவர்கள், அம்பலகாரர்கள், ஜமீன்தார்கள் முதலியவர்களை தங்கள்பாதுகாப்பு நிமித்தம் அண்டி வாழ்ந்து வந்தனர். அவர்களும் பெருமையுடன் நமது சமூகத்தினரை பாதுகாத்து வந்தனர்.

ஏறத்தாழ கி.பி. 1720ஆம் ஆண்டு காலத்தில் சிறுகூடல்பட்டியை குறுநில மன்னர் வெங்கலப்ப நாயக்கரின் வழித் தோன்றல்களில் ஒருவரான நாராயணசுவாமி நாயக்கர் ஆண்டு வந்தார்.

மேற்படி மன்னரின் பாதுகாப்பில் மாத்தூர் கோவில் கண்ணூர் பிரிவைச் சேர்ந்த நம் குடும்பமும் வாழ்ந்து வந்தது.

அந்த குடும்பத்தின் தலைவர் ''செட்டியார்'' (சரியான பெயர் அறிய முடியவில்லை) தலைவி மங்கையர்க்கரசி ஆச்சி (பிள்ளாத்தாள்) அவர்களுக்கு திருமணமாகி நீண்ட நாட்களாக மகப்பேறு

வாய்க்கவில்லை. தங்கள் குலதெய்வமான கடியாபட்டி அருகிலுள்ள சாத்தான் கோவில் ஐயனாரை வாரம் ஒரு முறை கால் நடையாகச் சென்று, பிள்ளைவரம் வேண்டி வணங்கி வந்தனர்.

வழக்கம் போல சென்று, நெய்வாசல் திட்டாணிக் கருப்பர் கோவில் வழியாக திரும்பும்போது ஒரு துறவி தோன்றி "நீங்கள் இருவரும் வாரம் தவறாமல் சாத்தான் கோவில் சென்று வருவதையும், வயிரவன்பட்டி மக்கமடை அய்யனின் மெய்ச்சேவகன் சின்னக்கருப்பன் உங்களுக்குத் துணையாக வெள்ளைப் புரவியில் உங்களைத் தொடர்ந்து உங்களுக்கு காவலாக வருவதையும் நான் காண்கிறேன். இனிமேல் நீங்கள் உங்கள் ஊர் அருகில் இருக்கும் மக்கள் மடை ஐயனை வணங்கினால் போதும், உங்கள் விருப்பம் விரைவில் நிறைவேறும்" என்று கூறித் திருநீறு வழங்கினார்.

அத்துடன் பக்கத்தில் இருந்த அழிஞ்சில் மரத்தில் ஒரு கொம்பை ஒடித்து ஆச்சியின் கையில் கொடுத்து "மகளே! உலகில் அழிஞ்சில் கொம்பை நட்டால் துளிர்ப்பதில்லை; ஆனால் நான் கொடுத்த இந்த அழிஞ்சில் கொம்பு துளிர்க்கும். இதை ஒரு சிவாலயத்தில் இறைவனுக்கு பக்கத்தில் பிரகாரத்தில் நட்டு ஒரு மண்டலம் வணங்கி வந்தால் இந்த அழிஞ்சில் துளிர்ப்பது போன்று உன் குலமும் துளிர்த்து கிளைத்துப்படரும். இது சத்தியவாக்கு" என்று கூறி மறைந்து விட்டார்.

ஆச்சி வயிரவன் கோவில் குடியில் பிறந்தவர். தன் தந்தையிடம் நடந்த விபரம் கூறினார்கள். விபரம் அறிந்த தந்தையார் ''மகளே உங்கள் இருவரிடமும் தோன்றி வரமளித்த துறவி எங்கள் குல தெய்வமான மக்கள் மடை ஐயனே தான். இனிமேல் நீங்களும் அவரை குல தெய்வமாகக் கொண்டாட வேண்டும். அவர் கொடுத்த அழிஞ்சில் கொம்பையும் அருகில் இருக்கும் வயிரவன் பட்டி எங்கள் சிவபெருமான் பக்கத்தில் நட்டு வணங்கிவர உன் எண்ணம் ஈடேறும்'' என்று கூறினார்.

அவ்வாறே தந்தை கூறியபடி அழிஞ்சில் கொம்பையும் வயிரவன் பட்டி சிவபெருமானையும் வணங்கி வர, ஆச்சியின் மணி வயிறும் வாய்த்தது. அடுத்தடுத்து (5) ஐந்து ஆண் குழந்தைகள் பிறந்தன.

அடுத்து ஆறாவது முறையாக ஆச்சி கருவுற்று நிறை மாத கர்ப்பிணியாக இருந்தார்கள்.

மன்னர் நாராயண சுவாமியிடம் ஒரு சிப்பாய் வேலைக்கு இருந்தார். அவர் மனைவி அழகானவர். ஆச்சியின் வீடும் சிப்பாயின் வீடும் அடுத்து அடுத்து இருந்தன.

சிப்பாயின் மனைவியை அடைய மன்னர் நினைத்து, சிப்பாய்க்கு வெளி ஊர்களில் வேலை நியமித்து அனுப்பிவிட்டு சிப்பாயின் மனைவியை தொந்தரவு செய்யத் தொடங்கினார். தொந்தரவு பொறுக்காமல் ஒரு நாள் தன் கணவர் சிப்பாயிடம் அவர் மனைவி விபரத்தைச் சொல்லிவிட்டார்.

இதை அறிந்த சிப்பாய் மறுமுறை மன்னர் வெளியூர் செல்ல அனுப்பியபோது வெளியூர் செல்லாமல் தன் வீட்டில் மறைவாக இருந்து கொண்டார். வழக்கம்போல் அன்று தினமும் மன்னர் வந்து தொந்தரவு செய்த போது சிப்பாய் ஆத்திரமடைந்து மன்னர் வயிற்றில் சமுதாட்டை (குத்தீட்டி) பாய்ச்சி விட்டார்.

மன்னரும் சரிந்த குடலை கையால் அழுத்திக்கொண்டு சுவர் ஏறி பக்கத்து வீட்டில் (ஆச்சி வீட்டில்) குதித்துவிட்டார். அவ்விடத்தில் நிறைமாத கர்ப்பிணியான ஆச்சி (மங்கையர்க்கரசியார்) வெளியூர் சென்ற தன் கணவர் இரண்டு நாட்கள் ஆகியும் வரவில்லையே என்று கவலையுடன் இருந்தார். இருட்டு நேரம். குடல் சரிந்த நிலையில் மன்னரின் உயிர் பிரிந்தது. இதைப் பார்த்த ஆச்சியும் அதிர்ச்சி தாங்காது கர்ப்பிணியாகவே அகால நிறைவை அடைந்து விட்டார்கள்.

வெளியூர் சென்றிருந்த செட்டியாரும் மறுநாள் அதிகாலை ஊர் திரும்பினார். இறுதிக் கிரியைகளை செய்து முடித்தார். சில மாதங்களுக்குப் பிறகு கவலையால் செட்டியாரும் சிவபதம் அடைந்து விட்டார். திக்கற்ற சிறுவர்கள் தாய்வழி பாட்டனார் வீட்டில் வளர்ந்து வந்தனர்.

சில வருடங்கள் சென்று நால்வருக்கு மட்டும் திருமணம் நடந்தது. ஐந்தாமவருக்கு திருமணம்

முடியவில்லை. திருமணம் முடிந்த நால்வருக்கும் மகப்பேறு வாய்க்கவில்லை. தொழிலும் முடக்கம் கண்டது.

ஆகவே ஐவரும் குறி கூறுவோனிடம் சென்று வேண்டினர். குறி கூறுவோன் ''மக்களே! உங்கள் தாயான மங்கையர்க்கரசியும் தந்தையும் அகால மரணத்தை எய்தி ''தெய்வ நிலையில்'' வாழ்கிறார்கள். அவர்கள் உங்களிடம் படைப்பு பள்ளையத்தை விரும்புகிறார்கள். ஆதலால் பனைவெல்லப் பணியாரம் படைத்து, பால்சோறு பொங்கி பள்ளயமிட்டு வணங்கி வாருங்கள். உங்கள் வீட்டு முற்றத்தில் உயிர் துறந்த மன்னர் நாராயண சுவாமியின் ஆவியும் உங்கள் வீட்டில் தான் குடி கொண்டுள்ளது. அன்னாரையும் சேர்த்து படைத்து வாருங்கள். அத்துடன் உங்கள் ஐயனின் மெய்ச் சேவகன் சின்னக் கருப்பனையும் குலம் தழைக்க வைத்த அரசிமகன் என்ற அழிஞ்சிலையும் இணைத்து விநாயகப் பெருமானை தலையாகக் கொண்டு ஆறுபள்ளயங்களிட்டு படைத்து வாருங்கள். உங்களுக்கு எல்லா நலன்களும் பெருகும்'' என வாழ்த்தி அனுப்பினார்.

வருடந்தோறும் அவ்வாறு படைத்து மன்னர் நாராயண சுவாமியையும், செட்டியாரையும் பிள்ளாத்தாளையும் வணங்கி கொண்டாடியதும் மைந்தர்களின் வாழ்வும் மலர ஆரம்பித்தது. வீட்டில் மழலைச் செல்வங்கள் கொஞ்சி விளையாடின.

இந்நிலையில் மணம் முடித்த நால்வரில் தலைமகன் கீழச்சிவல்பட்டிக்கும் இரண்டாவது மகன் ராயவரத்துக்கும் மூன்றாவது மகன் தேவகோட்டைக்கும் நான்காவது மகன் குளத்துப்பட்டிக்கும் (கோனாபட்டு) பிரிந்து சென்றனர்.

ஐந்தாவதுமகன் மணம் முடியாமல் சிறுகூடல் பட்டியில் இருந்து கொண்டு வீடு, நிலபுலன்களை கவனித்து வந்தார். சிற்சில சமயம் சாத்தூர், விருதுபட்டி, கொட்டாணிப்பட்டி முதலிய ஊர்களுக்கும் வியாபார நிமித்தமாய் சென்று வந்து கொண்டிருந்தார்.

ஆயினும் வருடம் ஒரு முறை சிறுகூடல்பட்டியில் எல்லோரும் ஒன்று கூடி, தங்கள் குல மூதாதையர்களுக்கு படைப்பு நடத்தி வந்தனர். அவர்கள் வழித் தோன்றல்களான நாமும் தொடர்ந்து இன்றும் ஆடிமாதம் படைப்பு நடத்தி வருகிறோம். இனிமேலும் தொடர்ந்து மிகவும் சிறப்பாக நடத்தி வர இறை அருளை வேண்டுவோம்.

சிறிது காலத்துக்குப் பிறகு குளத்துப் பட்டிக்கு சென்றவர்கள் படைப்பில் கலந்து கொள்ளவில்லை.

ஐந்தாவது மகன் வெளியூர் சென்று வரும் சமயம் கலப்பு திருமணம் செய்து கொண்டார். அவரும் படைப்பில் கலந்து கொள்கிறார். இப்பொழுது அவரது வாரிசுகள் அமராவதிபுதூரில் இருக்கிறார்கள். 1934-ஆம் வருட படைப்புவரை சிறுகூடல்பட்டியில் இருந்திருக்கிறார்கள்.

கீழச்சிவல்பட்டிக்கு சென்ற முதல் மகன் வாரிசு சாமியாடியாகவும் ராயவரம் சென்ற இரண்டாவது மகன் வாரிசு பூசாரியாகவும் சேவை செய்து வந்தனர். முன்பு சின்னக் கருப்பருக்கு ஆட்டுக்கிடா பலியும், மங்கையர்க்கரசி ஆச்சிக்கு கோழி பலியும் கொடுத்து படைத்து வந்தது. பின்னீடு திருவுளச் சீட்டுப்போட்டு பார்த்து சுவாமி உத்தரவு பெற்று சைவப்படைப்பாக தற்பொழுது நடைபெற்று வருகிறது.

சில வருடங்களுக்கு முன்பு வரை 3 நாள் படைப்பாக இருந்ததை காலப்போக்கில் மாறுதல் கருதி 2 நாளாக ஆக்கிக் கொண்டிருக்கிறோம்.

ஒவ்வொரு வருடமும், ஆடி மாதத்தில் நல்ல நாள் பார்த்து பெரிய படைப்பும், பூர நட்சத்திரத்தன்று ஆடிக்கூழ் கிண்டி திரு ஆடிப்பூரப்படைப்பும் பெரிய கார்த்திகை அன்று சொர்க்கப்பனை கொளுத்தி, கார்த்திகைப் படைப்பும் தை மாதம் முதல் தேதி பொங்கல் அன்று பொங்கல் படைப்பும் படைத்து வருகிறோம்.

நாம் எல்லோரும் வேலை நிமித்தம் வெளியூர் சென்று விட்டதால் தினசரி படைப்பு வீட்டில் விளக்கு ஏற்றுவதற்கு ஆள் நியமித்திருந்தோம். பல வருடங்களுக்கு முன் மன்னர் நாராயண சுவாமியின் பெண் வழித்தோன்றல் மங்கத்தாயி அம்மையார் தினசரி விளக்கு ஏற்றி வந்தார். மங்கத்தாய்க்கு ஆண் வாரிசு

இல்லை. பெண் வழி வாரிசுகள் சிறிது காலம் ஏற்றி வந்துள்ளனர். பின்னர் ஏதோ காரணத்தால் யாதவ சமூகத்தைச் சேர்ந்த நபர் விளக்கு ஏற்றி வந்துள்ளார். விளக்கு ஏற்றுபவர்களுக்கு விளக்கெண்ணெய், தீப்பெட்டி வாங்கிக் கொடுத்து சம்பளமும் கொடுத்து வந்தோம்.

இதுவரை உள்ளது வெ.கி.அ. பழநியப்ப செட்டியார் அவர்கள் தொகுத்து வழங்கிய விபரங்களின் சுருக்கம்

இனி, சில குறிப்புகள்

1. (1924-ஆம் ஆண்டு) ரக்தாக்ஷி வருடம் ஆடி மாதம் 22ஆம் தேதி பெரியபடைப்பு. புள்ளிவரி ரூ. 1 அரிசி படி - 2 (இதற்கு முன்பு வரை உள்ள பனைஓலை ஏட்டுக் கணக்குகள்யாவும் சிதிலமடைந்து விட்டன.)

தற்சமயம் அமராவதி புதூரில் இருக்கும் நா.நா. புள்ளி ½ நா.வெ. புள்ளி 1 அப்போது சிறுகூடல் பட்டியில் இருந்திருக்கிறார்கள்.

ஆடிமாதம் பெரிய படைப்பின் போது ராயவரத்திலிருந்து கிடாய் பிடித்து வந்துள்ளனர்.

1926 முதல் 1928 வரை சிறுகூடல்பட்டி புள்ளி வரவு இல்லை.

1929ல் அமராவதி புதூர் நா.வெ. புள்ளி - 1

நா.வெ.நா புள்ளி 1 வந்துள்ளார்கள்.

1930 முதல் 1932 வரை கணக்கு இல்லை

1933ல் அமராவதி புதூர் நா.வெ - 1. வெ.நா. - 1

சிறுகூடல்பட்டி நா.வெ. புள்ளி 1/2

1934 சிறுகூடல்பட்டி வெ.நா - புள்ளி 1 அமராவதி புதூர் 1 புள்ளி வரவு இல்லை

1935 அமராவதி புதூர் நா.வெ. புள்ளி 1 வெ.நா. புள்ளி 1 (ஏலவரவு இல்லை)

1936 முதல் 1940 வரை படைப்புக் கணக்கு விபரம் இல்லை

1941 அமராவதி புதூர் வெ.நா. ஒன்றரை புள்ளி

1942 அமராவதி புதூர் புள்ளி ஒன்றரை கோனாபட்டில் இருந்து 7 புள்ளி வரவு

1943 கோனாபட்டு புள்ளிகள் - அமராவதி புதூர் புள்ளிகள் வரவு

1944 கோனாபட்டு புள்ளிகள் வரவு. அமராவதி புதூர் புள்ளிகள் வரவு

1945 கோனாபட்டு புள்ளிகள் வரவு.

அமராவதி புதூர் புள்ளிகள் வரவு இல்லை.

1924ஆம் ஆண்டு படைப்பு முதல் இப்பொழுது நடைபெறும் படைப்பு வரை கீழச்சிவல்பட்டி பி. அளகாபுரி, ராயவரம், தேவகோட்டை பங்காளிகள்

படைப்புக்கு வந்து கலந்து கொண்டு மிகவும் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர்.

கோனாபட்டு நம்மள் பங்காளிகளிடம் ரூ. 6.25 ம் பொதுவில் ரூ. 6.25 ம் எடுத்து சின்னக்கருப்பர், அய்யனாருக்கு அபிஷேகம் செய்துள்ளனர்.

இதன் பின் சாமான்கள் அறையில் வைத்திருந்த நகைகள் களவு போனதால் 1946 முதல் 1957 வரை படைப்பு நடைபெறவில்லை.

1958ஆம் ஆண்டு பிள்ளாத்தாளுக்கு திருமாங்கல்யம் - ஒன்று குண்டு 2 (ஆக உருப்படி3) செய்து வைத்து படைத்துள்ளார்கள்.

பின்பு அய்யாபட்டிக்கு சென்று சுவாமி அழைத்து கேட்டதில் கோனாபட்டு பங்காளிகளை நீக்கி படைத்து வரும்படி சொன்னது.

அதுபோல 1959ஆம் ஆண்டு முதல் கீழச்சிவல் பட்டி - பி. அளகாபுரி, ராயவரம், தேவகோட்டை, அமராவதிபுதூர் பங்காளிகள் மட்டும் சேர்ந்து நாளது தேதி வரை படைத்து வருகிறோம்.

நாயக்கர்களைப் பற்றி

மன்னர் நாராயணசுவாமி, நாயக்கர் என்பதால், முன் காலத்தில் நாயக்கர் வம்சத்தினர் விளக்கு ஏற்றினால் தேவலை என்று ஏற்றச் சொல்லியிருக்கலாம். விளக்கு ஏற்றுவது குறித்து நாயக்கர்களுக்கும் நமக்கும் எந்த உடன்பாடும் இல்லை.

மங்கத்தாயி காலத்துக்குப் பின்பு யாதவ சமூகத்தினர் விளக்கு ஏற்றி வந்துள்ளனர். மங்கத்தாய்க்கு ஆண் வாரிசு இல்லை. அன்னாரின் பெண் வாரிசுகள் தொடர்ந்து ஏற்றவில்லை. பிற்காலத்தில் சீனப்பையா, துரைச்சாமி நாயக்கர், வேதம்மாள், கண்ணம்மாள், முதலியோர் ஏற்றி வந்துள்ளனர். எல்லோரும் நாயக்கர்கள்.

எல்லோரும் காலமான பிறகு, மங்கத்தாயியின் பெண் வழித்தோன்றல் ராஜாமணி அம்மாள் ஏற்றி வந்தார். அவர் கணவர் ராமச்சந்திரன் நாயக்கர். இவரது அண்ணன் செளமிய நாயக்கர். பிற்காலத்தில் இவர்கள் இருவரது குடும்பமும், சிறுகூடல்பட்டியில் இருந்து அவர்களின் வீட்டையும் நிலபுலன்களையும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ராஜாமணி அம்மாள் விளக்கு ஏற்றி வந்தாலும், அவரது கணவர் ராமச்சந்திரன் நாயக்கர் நம்கூட இருந்து படைப்பு வீட்டையும் மேற்பார்த்து வந்தார். இருவரும் மிகுந்த உள்ளன்போடு தினசரி விளக்கு ஏற்றி, நமக்கும் உதவியாக இருந்தனர்.

செளமிய நாயக்கரும் பெரியபடைப்பு சமயத்தில் 3 நாளும் வந்திருந்து நமக்கு மிகவும் உதவியாக இருப்பார். மற்ற நாயக்கர்கள் எல்லோரும் கால மாறுதலால் தொழில் கருதி வெளியூர் சென்று விட்டனர்.

நாம் நமது சொந்தக்காரர்களை படைப்புக்கு அழைப்பது போல நாயக்கர்களும் அவர்களுக்கு

நெருங்கிய சொந்தங்களையும் பெரியபடைப்புக்கு அழைப்பார்கள். அவ்வாறு முதலில் வந்தவர்கள் ராமச்சந்திரன் நாயக்கரின் சம்பந்தியார்கள். வருடந்தோறும் ஆடிமாதம் நடைபெறும் பெரிய படைப்புக்கு வந்துசெல்வர். அவர்களுக்கு நாம் பணியாரம், காளாஞ்சி எதுவும் கொடுப்பதில்லை. ராஜாமணி அம்மாளுக்கு கொடுக்கும் பணியாரத்தில் அவர்கள் கொடுப்பார்கள்.

இங்கு வந்து படைப்பில் கலந்து கொண்டு சுவாமி கும்பிட்டுச் செல்வது நயமாக இருப்பதாக சொல்வார்கள். நன்கொடை எதுவும், எழுதுவது இல்லை. காணிக்கையை மற்றவர்கள் போல உண்டியலில் செலுத்துவார்கள்.

இது விபரம் கேள்விப்பட்டு, பின்னீடு நாயக்கர்மார்கள் வரவர அதிகமாக வந்தனர். அவர்களில் பெண்கள், ரூ. 5, 10 என்று தருவார்கள். நாம் அந்தப் பணத்தை வாங்கி உண்டியலில் செலுத்திவிடுவோம்.

தாங்கள் பெண் பிள்ளைகள் என்று சொல்வார்கள். உத்தேசம் 10 பேருக்குள் தான் வரும். இதை சௌமிய நாயக்கரை வைத்து சரிபார்த்து, ''இவ்வளவு தூரம் பிரியமுடன் வந்துள்ளார்கள், அவர்களுக்கு 2 பணியாரமும் காளாஞ்சியும் கொடுப்போம்'' என்று கொடுத்தோம்.

சௌமிய நாயக்கர் சொல்படி மற்றவர்களுக்கு பணம் எழுதி பணியாரம் கொடுப்பது இல்லை. சௌமிய நாயக்கர் காலம் வரை இது நடந்தது. அதற்கு மேல் பணம் எழுதும் நபர்கள் வருடாவருடம் அதிகமாகி 50, 60 என்று வந்துவிட்டது. வருகிறவர்கள் எல்லாம் வீட்டில் உள்ள சின்னஞ்சிறு பிள்ளைகள் பெயரிலும், எழுத ஆரம்பித்துவிட்டார்கள்.

நம்மளிலும், புள்ளிகள், பெண் பிள்ளைகள் வர வர கூடி வருகிறது. ஏற்கெனவே புள்ளிக்கு 4 முதல் 5 வரை பணியாரம் கொடுத்தோம். தொடக்கத்தில் 25 படி மாவு இடித்தது. வருடம் ஆக ஆக 80 படிக்கு வந்து விட்டது. அப்போதும் புள்ளிக்கு 3 பணியாரம் தான். கொடுக்க முடிகிறது.

நம்மள் புள்ளிகள், பெண் பிள்ளைகளுக்கு பணியாரம் கொடுப்பதை நாம் நிறுத்த முடியாது. நாயக்கர் வீட்டுக்கு நாம் பணியாரம் கொடுக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. நாம் பிரியப்பட்டுக் கொடுப்பது. இப்படியே போனால் அதுவும், 200, 300 என்று வந்துவிடும் போல் தெரிந்தது. எனவே 4 வருடங்களுக்கு முன்பு வந்தவர்களிடம் நிலைமையை எடுத்துச் சொல்லி அவர்களுக்கு பணியாரம், காளாஞ்சி கொடுப்பதை நிறுத்திவிட்டோம். பணமும் வாங்குவது இல்லை.

இதில் முக்கியம் என்னவென்றால், தொடர்ந்து பணியாரம் காளாஞ்சி கொடுத்து வந்ததால்

அவர்களுக்கும் படைப்பு வீட்டில் உரிமை உண்டு என்ற அளவுக்கு 2009ஆம் வருடம் சண்டைக்கு வந்து விட்டார்கள்.

அவர்களிடம் ''ஐயா, இது எங்கள் வீட்டுப் படைப்பு, எங்கள் வீட்டில் நாங்கள் ஒன்று கூடி, படைத்து வருகிறோம். தாங்கள் வந்து சுவாமி கும்பிட்டு சாப்பிட்டுச் செல்லலாம். மற்றபடி உங்களுக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை'' என்று கூறிய பின்பு சண்டைக்கு வந்தவர்களும் மறு வருடம் முதல் படைப்புக்கு வருவது இல்லை.

ராமச்சந்திரன் நாயக்கரும், ராஜாமணி அம்மாளும் நம் பங்காளிகளிடம் மிகவும் உள்ளன்போடு தான் பழகுவார்கள். எல்லோரையும் அண்ணன், அண்ணமுண்டி என்று தான் அழைப்பார்கள்.

ராமச்சந்திரன் நாயக்கர் 2003ஆம் ஆண்டு காலமான பிறகு ராஜாமணி அம்மாள் சிறிது காலம் விளக்கு ஏற்றி வந்தார்கள். அவர்களது மகன்கள் 3 பேரும் வெளியூரில் இருந்தார்கள். வயோதிகம் காரணமாக அவர்களும் படைப்பு வீட்டுச் சாவியை நம்மிடம் தந்து விட்டு மகன் வீட்டுக்குச் சென்று விட்டார்கள். அப்போது நாம் தான்-கீழச்சிவல்பட்டியில் இருந்து இடை இடையே சென்று விளக்கு ஏற்றி வந்தோம்.

சிறிதுகாலம் சென்று நிலபுலன்களை மேற்பார்க்க சிறுகூடல்பட்டிக்கு வந்த ராமச்சந்திரன் நாயக்கர் மகன் ரெங்கசாமி விளக்கு ஏற்றி வருகிறார். ரெங்கசாமி

சிறுகூடல்பட்டிக்கு வந்தவுடன் ராஜாமணி அம்மாளும் சிறுகூடல்பட்டிக்கு வந்தார்கள். சிறிது காலம் சென்று ராஜாமணி அம்மாளும் காலமாகிவிட்டார்கள்.

ரெங்கசாமி விளக்கு ஏற்றிவரும் வரை ஏற்றலாம். பிறகு நமக்கு வேண்டியவர்களை வைத்து நாம் விளக்கு ஏற்றி வரலாம். நாயக்கர் வீடுதான் ஏற்ற வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

வெங்கலப்ப நாயக்கரின் ஆண் வாரிசு துரைச்சாமி வெங்கலப்ப நாயக்கர். ராமச்சந்திரன் நாயக்கரின் மாப்பிள்ளை. (மனைவி மங்கையர்க்கரசி) தற்சமயம் சீர்காழியில் குடும்பத்துடன் உள்ளார். பெரியபடைப்பு சின்னப்படைப்பு எல்லாவற்றிற்கும் சீர்காழியில் இருந்து வந்து கலந்து கொண்டு படைப்பு வேலைகள், பிள்ளாத்தாள் அபிஷேகம் முதலியவைகளை ஆழ்ந்த பற்றுடன் செய்வார். எல்லோரிடமும் மிகவும் அன்புடனும் மரியாதையுடனும் பழகுவார். எல்லாப் படைப்பிலும் ''நாராயணசுவாமி''யின் பள்ளயம் காளாஞ்சி இவரைச் சேர்ந்தது. (அவர் வர இயலாத சில சமயங்களில் அந்தப்பள்ளயத்தை ராமச்சந்திரன் நாயக்கர் உண்பார் - இருவரும் வர இயலாத சமயங்களில் நம்மில் யாராவது உண்போம்.)

நாராயணசுவாமி பள்ளயமும் துரைச்சாமி வெங்கலப்ப நாயக்கர் உண்பது வரை உண்ணலாம். அதன் மேல் அவர் மகன் உண்ணலாம். அதன் மேல் **நம் விருப்பப்படி** யாரையும் உண்ணச் சொல்லலாம்.

இந்த அளவில்தான் நாயக்கர்களுக்கும் நமக்கும் உள்ள தொடர்பு.

நம்மிடமும் படைப்பு வீட்டுக்கும் மிகவும் விசுவாசமாக இருப்பதன் காரணமாக ரெங்கசாமியை விளக்கு ஏற்றி வரவும் வெங்கலப்ப துரைச்சாமி நாயக்கரை ''நாராயணசுவாமி'' பள்ளயம் உண்ணவும் நியமித்துள்ளோம். ரெங்க சாமிக்கு மட்டும் சம்பளம் கொடுக்கிறோம்.

நாயக்கர்தான் விளக்கு ஏற்ற வேண்டும், நாயக்கர்தான் ''நாராயணசுவாமி'' பள்ளயம் உண்ண வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இதற்கு மற்ற நாயக்கர்கள் யாரும் உரிமை கோர முடியாது.

மேலும் சில விபரங்கள்

நாராணயசுவாமி கிருபையால் நம் புள்ளிகளும் கூடி வருகின்றது. கூடிவரும் புள்ளிகள் மற்றும் பெண்பிள்ளைகள் தங்குவதற்கு தோதாக நம் படைப்பு வீட்டுக்கு எதிரில் உள்ள இடத்தை பழ. மு. பழ. பழநியப்ப செட்டியார் வகையறா பழ.மு. பழ. சே. சிங்காரம் செட்டியார் மகன் சேதுராமன் - 1 பழ. மு. பழ. சுப்பிரமணியன் செட்டியார் மனைவி ராமாயி ஆச்சி - 2, மேற்படி 2வது நபரின் மகன் SP. பழநியப்பன் - 3, பழ. மு. சொக்கலிங்கம் செட்டியாரின் மகன் ராமசாமி - 4 மேற்படி 4வது நபரின் தம்பி முத்தையா - 5 ஆகிய ஐந்து

பேரிடம் இருந்து மூன்று தாக்காக (30.12.1996) (11.6.1997) (7.2.2000) ரூபாய் 79,601 க்கு விலைக்கு வாங்கி ''கீழச்சிவல்பட்டி, பி. அளகாபுரி, ராயவரம், தேவகோட்டை, அமராவதி புதூர் கண்ணூர் பங்காளிகள் கூடி படைத்து வரும் நாராயணசுவாமி படைப்பு வீட்டுக்காக, பி. அளகாபுரி நா.தெ.மு.தெ. அழகப்ப செட்டியார்'' பெயருக்கு திருப்பத்தூரில் பத்திரம் பதிந்து புதிதாக பெரிய ஹால், கழிப்பறை, குளியல் அறைகள் கட்டி மேற்படி நா.தெ.மு.தெ. அழகப்ப செட்டியார் பெயருக்கு ''தே. அழகப்ப செட்டியார்'' என்று குமாரபேட்டை பஞ்சாயத்து வசம் வீட்டுவரியும் கட்டி வருகிறோம். கதவு எண் 1/55.

பத்திரம் 3க்கு விபரம் (1) No 1311 / 1996 தேதி 30.12.1996. (2) No 1150 / 1997 தேதி 11.6.1997 (3) No 172 / 2000 தேதி 7.2.2000 மேற்படி மூன்று கிரையப்பத்திரங்களும், படைப்பு வீட்டில் உக்கிராண அறையில் உள்ள அய்யனார் கோவிலைச் சேர்ந்த இரும்பு பெட்டகத்தில் உள்ளன.

படைப்பு வீட்டுக்கும் மேற்படி தே.அழகப்ப செட்டியார் என்று வீட்டு வரிகட்டி வருகிறோம். கதவு எண் 1/14.

புதிதாக கட்டிய ஹாலும் 2001ஆம் ஆண்டு ஆடி மாத படைப்புக்கு புழக்கத்துக்கு வந்தது. மொத்தச் செலவு ரூ. 10,98,285-55 மேற்படி செலவுக்கு புள்ளிவரி,

நன்கொடை வரவு ரூ. 3,98,108.25 மேற்கொண்டு செலவான ரூபாயும் படைப்பு வீட்டு இருப்பில் இருந்து எடுத்துக் கொண்டது.

கழிப்பறை, குளியல் அறைகளும் 2004ஆம் ஆண்டு ஆடி மாதம் கட்டி முடித்தது. செலவு ரூ. 1,26,576.75ம் படைப்பு வீட்டு இருப்பில் இருந்து எடுத்துக் கட்டியது.

சாப்பாட்டு ஹால் கட்டியது 2009ஆம் ஆண்டு ஆடி மாதம். மொத்தச் செலவு ரூ. 12,95,137.50 புள்ளி வரி, நன்கொடை வரவு ரூ. 6,51,973.50 மேற்கொண்டு செலவான ரூபாயும் படைப்பு வீட்டு இருப்பில் இருந்து எடுத்து கட்டியது.

2011ஆம் ஆண்டு ஆடி மாதம் முதல் கட்டு சுவர், வாசல் சிமெண்ட் பூசி, பத்தி முழுவதும் டைல்ஸ் போட்டு, முதல் கட்டு எலக்ட்ரிகல் புதிய ஒயரிங் செய்தது, பணியாரம் வைக்கும் அறை சிமெண்ட் பூசி, தளம்போட்டு, வர்ணம் வைத்தது. மொத்தச் செலவு ரூ. 2,41,736.00 படைப்புவீட்டு இருப்பில் இருந்து எடுத்து செலவு செய்தது.

நம்மள் பங்காளிகளிடம் இருந்து தங்கம் கிராம் 150 நன்கொடையாகப் பெற்றும், தங்கத்துக்குப் பதிலாக ரொக்கம் ரூ. 16,000/- பெற்று, அதற்கு தங்கம் விலைக்கு வாங்கியும் பிள்ளாத்தாளுக்கு கிராம் 175ல் கழுத்து உரு கோர்வை ஒன்றும், செட்டியாருக்கு கிராம் 55ல் ருத்ராட்ச

கொடிவடம் ஒன்றும் செய்து தாது வருடம் ஆடி மாதம் (1996) படைப்பில் வைத்துப் படைத்து வருகிறோம்.

பின்னீடு பிரார்த்தனைக்காக வந்த தங்கத்தில் பிள்ளாத்தாளுக்கு கிராம் 16ல் காப்பு 2ம் நாராயணசுவாமிக்கு கிராம் 6ல் பூணூலும் செய்து சித்திரபானு வருடம் ஆடி மாதம் (2002) படைப்பில் வைத்துப் படைத்து வருகிறோம்.

பெரிய படைப்பில் பேழைகள் துவைப்பது தேவகோட்டை பங்காளிகளைச் சேர்ந்தது.

ராயவரம் பங்காளிகள் ஏற்கெனவே பூசாரிகளாக இருந்தனர். பூசாரியாக வயதில் பெரியவர்களை நியமிப்பது வழக்கம். கடைசியில் பார்த்த பூசாரி சிவபதம் அடைந்த பிறகு, பூசாரியாக வர, ராயவரம் பங்காளிகள் யாரும் ஒத்துக் கொள்ளவில்லை.

ஆகவே பங்காளிகள் எல்லோரும் அய்யாபட்டிக்குச் சென்று சாமி அழைத்துக் கேட்டதில் ''நீங்கள் மூன்று ஊரும் சேர்ந்து படைக்கிறீர்கள். உங்களில் ராயவரம் பங்காளிகளில் படைப்புக்கு வந்திருப்பவர்களில் ஒருவர் சுவாமிகளுக்கு நைவேத்தியம் செய்து சாம்பிராணி தூபம் காண்பிக்கிறது; சாம்பிராணி தூபம் பார்த்தவுடன் நாராயணசுவாமி, பிள்ளாத்தாள், செட்டியார் அருள் வேண்டி பாடல்கள் பாடி கூட்டுப் பிரார்த்தனை செய்ய வேண்டும். அடுத்து கீழச்சிவல்பட்டி - பி. அளகாபுரி பங்காளிகளில் ஒருவர் சூட தீபம் பார்க்க வேண்டும். எல்லோரும் சுவாமி கும்பிட்டவுடன் தேவகோட்டை

பங்காளிகளில் ஒருவர் பள்ளயம் நகர்த்தி வைத்து தீபாராதனை பார்க்க வேண்டும். விபூதியை அவரவர்களே எடுத்து அணிந்து கொள்ளுங்கள்'' என்று சொன்னது.

அதுபோலவே 7.8.1984ஆம் ஆண்டு முதல் இவ்வாறு சிறப்புடன் படைத்து வருகிறோம்.

நிறைவாக, பெரிய படைப்புக்கு பி.அளகாபுரி ஸ்ரீ கலங்காத கண்ட விநாயகர் கோவிலில் கூடி தேதி வைத்து, பங்காளிகள் எல்லோருக்கும் படைப்பு தேதி விபரம் எழுதியும், சாமான்கள் சேகரித்து சிறுகூடல்பட்டி கொண்டு சென்றும், அங்கு பாகுகாய்ச்சி, மாவுசலித்து, வெத்திலை பட்டியல் கட்டி, விபூதி, குங்குமம் மடித்து, சுவாமிகளுக்கு அலங்காரம் செய்தல், பள்ளயம் போடுதல், உக்கிராணம், சமையல் மேல் பார்த்தும், பணியாரம் சுட்டு, ஆறவைத்து, அடுக்கி பிளாஸ்டிக் பையில் போட்டு எல்லா ஊர் பங்காளிகளுக்கும் தனித்தனியாக புள்ளிகள் மற்றும் பெண் பிள்ளை பிள்ளைகளுக்கு கொடுத்தும் மற்ற படைப்பு வேலைகள் பார்ப்பதும் பெட்டியடி பார்த்து கணக்குகள் எழுதி பேரேடு பதிவதும், ஏலம் போடுவதும் நம் மூன்று ஊர் பங்காளிகளும் மிகவும் சிறப்பாகச் செய்து வருகின்றனர்.

அந்தக் காலத்திலிருந்து நாளது தேதி வரை அவர்களது பெயரை எல்லாம் எழுதினால் எழுத இயலாது. பங்காளிகள் அவ்வளவு பேரும் ஒற்றுமையாக இருந்து படைப்பு வேலை பார்த்துள்ளனர். அது போலவே இன்றும் பார்த்து வருகின்றனர்.

2002ஆம் ஆண்டு படைப்பு வரை பி. அளகாபுரி நா.தெ.மு. குடும்பத்தினர் மேற்பார்த்து வந்தனர். அதன் பிறகு பி.அளகாபுரி வெ.நா. வெங்கடாசலம் செட்டியார், கீழச்சிவல்பட்டி கி.நா. பழ.கி. பழநியப்ப செட்டியார், பி. அளகாபுரி க.தெ. நா.அ.வ.தெ. அங்கப்ப செட்டியார் மூவரும் மேற்பார்த்து வருகிறார்கள். நம்மள் பங்காளிகள் எல்லோருக்கும் மேற்பார்த்து வரும் உரிமை உண்டு.

நமது குலமக்கள் அனைவருக்கும் நீண்ட ஆயுளும், நிறைந்த செல்வமும், நோயற்ற வாழ்வும், எல்லா நலனும் என்றும் நிறைந்திட ஸ்ரீ மக்கமடை ஐயனையும், நாராயண சுவாமியையும், மங்கையர்க்கரசி யாரையும், (பிள்ளாத்தாள்) செட்டியாரையும் மன, மொழி, மெய்யால் உள்ளன்போடு ஒற்றுமையாக வேண்டுவோம்.

வம்ச விருட்சம்

நம் பங்காளிகளின் வம்ச விருட்ச படம் படைப்பு வீட்டில் மாட்டி இருக்கிறது. இன்னும் நிறைய புள்ளிகள் அதில் சேர்க்க வேண்டியது இருக்கிறது. வெளியூரில் உள்ள நமது பிள்ளைகள் அந்தப் படத்தை நன்கு கவனமாகப் பார்த்து நம்மள் பங்காளிகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேணும்.

சுபம்

நாராயண சுவாமி அருட்பா

வாழ்வாங்கு வாழ்ந்ததனால் - என்றும்
வளர் தெய்வம் ஆனவரே!
தாள் பணிந்தோம் உம்மை - எமக்குத்
தந்தருள் சக்தியினை!

நாராயணசாமி ஐயா நாராயணசாமி
நம்பி உமைப் பணிந்தோம் - எமக்கு
நல்ல வழி காமி

சிறுகூடல் பட்டியிலே - விளங்கிச்
சீர்வளர்க்கும் செல்வா!
பெருமையெல்லாம் வழங்கும் - எங்கள்
பேரருள் காவலனே! (நாராயணசாமி)

ஆடி மாதத்திலே - படைக்க
அன்பர்கள் வந்திடுவோம்!
கூடியே பொங்கலிட்டு - இன்பம்
கோடியெனப் பெறுவோம் (நாராயணசாமி)

பணியாரங்கள் படைப்போம் - உந்தன்
பக்தியில் பாடிடுவோம்
அணிசெய்யும் ஆண்டவனே - என்றும்
அருள் மழை பெய்திடுவாய்! (நாராயணசாமி)

இன்பம் வளர்த்திடுவாய் - எங்கள்
இல்லறம் காத்திடுவாய்!
கண்கண்ட தெய்வமய்யா - என்றும்
கற்பகமாய்ப் பொலிவாய்! (நாராயணசாமி)

எங்கள் குலதெய்வம்

நாராயண சுவாமி ஐயா நாராயணசாமி!
ஐயா நாராயண சாமி
நலம் தந்து காத்திடுவார் நாராயணசாமி!
ஐயா நாராயண சாமி

எங்கள் குல தெய்வம் ஐயா நாராயணசாமி!
ஐயா நாராயண சாமி
எங்கள் குறை தீர்த்தருள்வார் நாராயணசாமி
ஐயா நாராயண சாமி
பங்கமெல்லாம் நீக்கிடுவார் நாராயணசாமி
ஐயா நாராயண சாமி
படைப்பதனை ஏற்றுஅருள்வார் நாராயணசாமி
ஐயா நாராயண சாமி

கருத்திலே நின்றிடுவார் நாராயணசாமி!
ஐயா நாராயண சாமி
கனவிலும் தோன்றிடுவார் நாராயணசாமி!
ஐயா நாராயண சாமி
கேடதனை நீக்கிடுவார் நாராயணசாமி!
ஐயா நாராயண சாமி
கேட்டவரம் தந்திடுவார் நாராயணசாமி!
ஐயா நாராயண சாமி

அன்பர்க்கு அருள்தருவார் நாராயணசாமி!
ஐயா நாராயண சாமி
ஆபத்திலே காத்திடுவார் நாராயணசாமி!
ஐயா நாராயண சாமி
மனமிரங்கி வந்திடுவார் நாராயணசாமி!
ஐயா நாராயண சாமி
மனம்போல வாழவைப்பார் நாராயணசாமி!
ஐயா நாராயண சாமி

வரம்தந்து காத்திடுவார் நாராயணசாமி!
ஐயா நாராயண சாமி
பிரம்பேந்தி வந்திடுவார் நாராயணசாமி!
ஐயா நாராயண சாமி
சிறுகூடல் பட்டி வாழும் நாராயணசாமி!
ஐயா நாராயண சாமி
சிறப்பாக வாழ்விப்பார் நாராயணசாமி!
ஐயா நாராயண சாமி

★

சமய மாலை

1. செல்வங்கள் பதினாறும் நம்மில்லம் சேர்ந்திடவே
எல்லோரும் ஒன்றாகக் கூடி வணங்குகிறோம்
பல்லோரும் போற்றுகிற பரம சிவன்மைந்தா
நல்லவரே கணபதியே வருவாய் இதுசமயம்.

2. அலங்காரம் செய்வித்து அகங்குளிரப் படைக்கின்றோம்
கலங்கரை விளக்கம்போல் வாழ்வினிலே ஒளிதருவீர்
நலமெல்லாம் பெறவேண்டி சிரம்தாழ்த்தி வணங்குகிறோம்
குலவிளக்கே அரசிமகனே வருவாய் இது. சமயம்.

3. பல்லாண்டாய் பெருமையுடன் படைத்து வருகின்றோம்
நல்லோராய் எல்லோரும் வாழ்ந்து உயர்ந்திடவே
எல்லோரும் ஒருசேர உவந்து அழைக்கின்றோம்
வல்லவரே சின்னக்கருப்பா வருவாய் இதுசமயம்.

4. தெள்ளுதமிழ் மொழியுடனே உயர்தெலுங்கும் பேசிடுவாய்
அள்ளிஅருள் தருகின்ற கற்பகமாய் இருந்திடுவாய்
கள்ளிருக்கும் மலராலே மனங்குளிரப் படைக்கின்றோம்
உள்ளிருக்கும் நாராயணசாமி வருவாய் இதுசமயம்.

5. அறங்கள் பலசெய்கின்ற நகரத்தார் முன்னேற
வரங்கள் பலதரவேண்டி வந்துன்னைப் போற்றுகிறோம்
மறவாமல் ஆண்டுதோறும் மகிழ்ச்சியுடன் படைக்கின்றோம்
விரைவாக நாராயணசாமி வருவாய் இதுசமயம்.

6. பணியாரம் செய்வித்து பாச்சோறும் படைக்கின்றோம்
அணியணியாப் பூக்களையும் அலங்கரித்துப்
பார்க்கின்றோம்
பணிவுடனே வணங்குகிறோம் எங்களது ஐயாவே
கனிவுடனே செட்டிஐயா வருவாய் இதுசமயம்.

7. வண்ணப் பட்டாடை மலர்மாலை அணிவித்து
கண்குளிரப் பார்த்திடுவோம் நம்மில்ல ஐயாவை
மண்ணில் மாமரமாம் ஆல்போல் வளர்ந்துள்ளோம்
கண்முன்னே செட்டிஅய்யா வருவாய் இதுசமயம்.

8. மங்களமாய் கழுத்துருவும் மஞ்சள்வைத்து
வணங்குகிறோம்
பங்காளி அனைவருமே கரங்கூப்பி அழைக்கின்றோம்
பொங்கிவரும் புதுப்புனலாய் வாழ்வதனில் வழிகாட்ட
எம்பாட்டி புள்ளாத்தாள் வருவாய் இதுசமயம்.

9. பூவைத்துப் போற்றுகிறோம் பொன்னவளே காப்பாற்று
'பா'பாடி அழைக்கின்றோம் பேரன்பேத்தி அனைவருமே
தாஎன்றால் தந்திடுவாய் உந்தனருள் அத்தனையும்
கோமகளே புள்ளாத்தாள் வருவாய் இதுசமயம்.

10. ஆடிப் படைப்பினையும் ஆர்வமுடன் படைக்கின்றோம்
நாடிவரும் எங்களது நல்படைப்பை ஏற்றிடுவீர்
தேடிக் கிடைக்காத செல்வமெல்லாம் தந்திடுவீர்
குடிகாக்கும் அறுவருமே வருவீர் இதுசமயம்.

★



